**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 180/2023**

**Deposition of P.W. 1 – திரு. ஜஸ்டின் ராஜ்**

**Dated:** 11.02.2026

**Accused Present.**

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

03.06.2013ம் தேதியிலிருந்து 01.04.2017ம் தேதி வரை தக்கலை காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணியாற்றி வந்தேன். நான் தக்கலை காவல்நிலையத்தில் பணியாற்றிய போதோ, அதற்கு முன்போ எதிரி மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டதா என்றால் வழக்கு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எதிரி மீது தக்கலை காவல்நிலையத்தில் எவ்வித வழக்கும் இல்லை என்றால் சரியல்ல. சாட்சி எனது சித்தப்பா மகன் என்றால் சரிதான். சாட்சிகள் 5 மற்றும் 6 சேம்ராஜ் மற்றும் ஆன்றோ ஆகியவர்களும் எனது சித்தப்பா மகன்கள் என்றால் சரிதான். 3வது சாட்சி ஷீலா எனது மனைவி. சம்பவம் நாள் நான் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தை போலீசார் பார்வையிட்டதாக கேள்விபட்டேன். எனது இருசக்கர வாகனமும் சம்பவ இடத்தில் தான் இருந்தது. போலீசார் எனது இருசக்கர வாகனத்தை எடுத்து செல்லவில்லை. எதிரி இடித்ததால் எனது வாகனத்திற்கு சேதம் இருந்தது. எனக்கு மொத்தம் 3 காயங்கள் இருந்தது. என்னை எனது மனைவி மருத்துவமனைக்கு அழைத்து போனார். சம்பவம் முடிந்து 5 நிமிடத்தில் எனது மனைவி அங்கு வந்தார். சகாயமும், பேபியும் எனது மனைவி வந்த பிறகு தான் வந்தார்கள். எதிரி வண்டியை சாலையில் நிறுத்தி நான் வரும்போது வண்டியை திருப்பினார். போலீசாரிடமும் எதிரி வண்டியை சாலையில் நிறுத்தி நான் வரும் போது

திருப்பி எனது வண்டியை இடித்து தள்ளியதாக கூறினேன். வண்டியிலிருந்து கீழே விழுந்ததால் எனக்கு காயங்கள் ஏற்பட்டது என்றால் இல்லை. காலில் மட்டும் கீழே விழுந்தபோது காயம் ஏற்பட்டது. சம்பவத்திற்கு முன்னர் எனக்கும், எதிரிக்கும் விரோதம் உண்டா என்றால் தக்கலை காவல்நிலைய வழக்கு தொடர்பாக கைது செய்ததிலிருந்து விரோதம் உண்டு. நான் எதிரியை தாக்கி எதிரி 05.10.2017 முதல் 07.10.2017 வரை குழித்துறை அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று என் மீது காவல்துறை கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தும் என் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. புகாரை நான் தான் கைப்பட எழுதி கொடுத்தேன். நான் அந்த புகாரில் TN 75 M 0940 என எனது இருசக்கர வாகன எண்ணை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எதிரி வலது காலால் எனது மார்பில் மிதித்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். எதிரி மிதித்ததில் உள்காயம் ஏற்பட்டது. அந்த காயத்தை மருத்துவரிடம் காட்டினேன். நான் ஆட்டோவில் 10.00 மணிக்கு மருத்துவமனைக்கு போனேன். அப்போது என் மனைவியும் என்னுடன் வந்தார். எனது மனைவி என்னை மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை என்றும், எனது சித்தப்பா மகன் சேம்ராஜ் என்னை மருத்துவமனைக்கு அழைத்து போனார் என்றால் சரியல்ல. போலீசார் என்னை அன்றைய தினம் 02.30 மணிக்கு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். எனக்கு TN 75 M 0940 என்ற வாகனம் கிடையாது என்றும், அப்படி ஒரு பதிவில் என் பெயர் இல்லை என்றால் சரியல்ல. எதிரி வாகனத்தில் வந்து இடித்ததில் நான் நிலை தடுமாறி விழுந்து விட்டதாக போலீசாரிடம் கூறவில்லை. எனது

தம்பி சகாயம் சொந்தமாக கார் ஓட்டி வருகிறார். சம்பவ இடத்தின் அருகே கிறிஸ்டோபர், அஜின் ஆகியவர்கள் வீடுகள் உள்ளன. சாட்சிகள் அஜின், கிறிஸ்டோபர் ஆகியவர்களை சாட்சிகளாக போடவில்லை என்றால் அப்போது அவர்கள் வீட்டில் இல்லை. ஆலக்காவிளைக்கும், நல்லவிளைக்கும் இடையே 1 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரியல்ல, 100 மீட்டர் தூரம் இருக்கும். எதிரியின் வாகனமும் கீழே விழுந்தது. எதிரி வண்டி என் வாகனம் மீது மோதியதால் அதுவும் கீழே விழுந்தது. எதிரி அடித்ததாக கூறும் கேரியர் அவர் ஓட்டி வந்த வண்டிக்குரிய கேரியர் தான். அந்த கேரியர் இரும்பினால் செய்யப்பட்டது. கேரியர் சுமார் 30 செ.மீ நீளம் இருக்கும். நான் கீழே விழுந்து காலில் காயம் ஏற்பட்ட பிறகு எதிரி கேரியரை கொண்டு தலையில் அடித்தாரா என்றால் தலையில் அடித்து விட்டு கன்னத்தில் அடித்தார். போலீசார் விசாரணையிலும் எதிரி கேரியரை கொண்டு அடித்த போது நான் கை கொண்டு அடித்தாகவும் அப்போது கை வைத்து தடுத்தேன். நான் கை வைத்து தடுத்ததில் எதிரி வைத்திருந்த கேரியர் கன்னத்தில் குத்தியது, அந்த விபரத்தை போலீசார் விசாரித்த போது சொன்னேன். நான் வாகனத்தில் செல்லும் போது எதிரி ஓரத்தில் நின்று கம்பி கொண்டு அடித்ததாக கூறியிருந்தால் அது பொய். எதிரி ஓங்கி அடித்தார் கையால் தடுத்ததால் கன்னத்தில் பட்டது. எதிரி கம்பி கொண்டு என்னை அடிக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கில் சொல்லியுள்ள காயங்கள் வீக்க காயமும், உரசல் காயமும் என்று கம்பியால் அடித்த காயங்கள் இல்லை என்றால் சரியல்ல. காவல்துறையில் வேலை பார்ப்பதால் போலீஸ் அதிகாரிகளை சுவாதீனப்படுத்தி எதிரிக்கு எதிராக பெரிய பிரிவுகளில் பொய் வழக்கு பதிவு செய்தேன் என்றால் சரியல்ல.

நான் புதுக்கடை காவல்நிலையத்திற்கு அலுவல் நிமித்தமாக செல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரியும் எனது ஒன்றுவிட்ட சித்தப்பா மகன் தான். எதிரிக்கும், எனக்கும் சொத்து சம்மந்தமாக முன்விரோதம் உண்டு என்றால் இல்லை. சொத்து சம்மந்தமான முன்விரோதத்தில் எதிரியை வழக்கில் சிக்க வைக்க வேண்டுமென்பதற்காக திட்டமிட்டு இல்லாத பதிவெண்ணை வைத்து பொய்யான வழக்கு பதிவு செய்தோம் என்றால் சரியல்ல. நானும், என் தம்பியும் எதிரியை பிடித்து போலீசாரை வரசொல்லி ஒப்படைத்தோம் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 180/2023**

**Deposition of P.W. 2 – சகாயம்**

**Dated:** 11.02.2026

**Accused Present.**

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நீதிமன்றத்தில் சொன்னதுபோல் தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன். என் வீடு அ.சா.1ன் வீட்டின் அருகே தான் உள்ளது. சம்பவ நேரத்தில் நான் என் வீட்டில் இருந்தேன் என்றால் என் மாமியார் வீட்டில் இருந்தேன். சொந்தமாக கார் ஓட்டி வந்தேன். சம்பவ காலத்தில் கூலிவேலை செய்து கொண்டிருந்தேன். காலை 08.00 மணிக்கு வேலைக்கு போவேன். 4.30 மணிக்கு திரும்ப வருவேன். சம்பவ நாளன்று என்னுடன் வேறு யாரும் வரவில்லை. சம்பவம் பற்றி எனக்கு எப்போது தகவல் கிடைத்தது என்றால் சம்பவம் நடந்த சத்தம் கேட்டு போய் பார்த்தேன். எதிரியை போலீசார் கைது செய்ததை நான் பார்க்கவில்லை. எதிரி நான் போகும் போது ஓடி விட்டார். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், அ.சா.1 அண்ணன் என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 180/2023**

**Deposition of P.W. 4 – ஷீலா**

**Dated:** 11.02.2026

**Accused Present.**

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நீதிமன்றத்தில் சொன்னது போல் தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன். போலீசார் என்னை தக்கலை மருத்துவமனையில் வைத்து 02.30 மணிக்கு விசாரித்தார்கள். போலீசார் என்னை விசாரிக்கும் போது 2016ம் ஆண்டு ஒரு நாள் எதிரி எங்கள் வீட்டின் முன்பு வந்து சத்தம் போட்டதாக சொன்னேன். சம்பவ இடத்திற்கும், எனது வீட்டிற்கும் 100 மீட்டர் தூரம் இருக்கும். 1 கி.மீ தூரம் இருக்கும் என்றும் நான் 100 மீட்டர் என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடப்பதாக ஊரில் உள்ளவர்கள் சொல்லி எனக்குத் தெரியும். என் கணவருக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 180/2023**

**Deposition of P.W. 5 – ஆன்றோ**

**Dated: 11.02.2026**

**Accused Present.**

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

அ.சா.1 மற்றும் அ.சா.2 எனது பெரியப்பா மகன்கள் என்றால் சரிதான். ஆலக்காவிளைக்கும் - நல்லவிளைக்கும் இடையே 100 மீட்டர் தூரம் இருக்கும். மேற்படி ஆலக்காவிளைக்கும் - நல்லவிளைக்கும் இடையே 1 கி.மீ தூரம் இருக்கும் என்றும், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கையொப்பம் செய்ததில் இன்னாரை, இன்னார் அடித்தார்கள் என்றும், வாகனத்தை எடுத்து சென்றது பற்றியும் எழுதப்பட்டிருந்தது. போலீசார் தான் படித்து சொன்னார்கள். போலீசார் என்னை மதியம் 01.00 மணிக்கு மேல் விசாரித்தார்கள். நான் கடை வைத்து வெல்டிங் வேலை செய்து வருகிறேன். காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்யவில்லை. காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து விட்டு பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 180/2023**

**Deposition of P.W. 6 – சேம்ராஜ்**

**Dated:** 11.02.2026

**Accused Present.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.5 ஆகியவர்கள் எனது சகோதரர்கள் என்றல் சரிதான். எதிரி அடித்ததற்கும் மருத்துவமனையில் வைத்து கையொப்பம் போட்டேன். 01-15 மணிக்கு வரைபடம் வரைந்ததில் கையொப்பம் போட்டேன். மருத்துவமனையில் வைத்து ஒன்றும், வரைபடம் வரைந்த இடத்தில் இரண்டுமாக மொத்தம் மூன்று கையொப்பம் செய்தேன். எனக்கு எழுத, படிக்க தெரியாது என்றால் சரியல்ல. கையொப்பம் செய்ததில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்குத் தெரியாது. பார்வை மகஜரை நான் படித்து பார்க்கவில்லை. ஜஸ்டின் ராஜை நான் மருத்துவமனைக்கு போகவில்லை, ஆனால் அதன் பிறகு போனேன். அண்ணனுக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.